[1996 ஆகஸ்ட் 10

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 152, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

152--

ஆமணக்கு எண்ணெய்த் தொழிற்சாலை

*630--**திரு. பி.என். வல்லரசு :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் ஆமணக்கு எண்ணெய்த் தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் ஆமணக்கு எண்ணெய்த் தொழிற்சாலையை உருவாக்கும் திட்டம் எதுவும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 153, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

153--

செய்யாற்றில் சார்பு நீதிமன்றம்

*279--**திரு. வ. அன்பழகன் :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாற்றில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்த அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

1996 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. ஆலடி அருணா சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாற்றில் சார்பு நீதிமன்றம் (சப்-கோர்ட்) ஏற்படுத்த அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 154, மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. கே. சுப்பராயன், திரு. ச. அழகுவேலு மற்றும் திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

154--

ஆயுள் தண்டனைக் கைதிகள்

319*-திரு. கே. சுப்பராயன் :**

திரு. ச. அழகுவேலு :

திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களை விடுதலை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகளின் எண்ணிக்கை 432.

(ஆ) அவர்களை விடுதலை செய்யும் திட்டம்/செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.